வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1408 /ஆ2/2023 . நாள் : 10.04.2023.

பொருள்: பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம்– தினமலர் நாளிதழும், VIT பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தும் வழிகாட்டி மற்றும் கல்விக்கண்காட்சி நிகழ்ச்சி வரும் 22.04.2023 மற்றும் 23.04.2023 (சனி, ஞாயிறு) அன்று நடைபெறவுள்ளது – அரசு/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளி – 10, 11, மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவ/மாணவிகளை பங்குபெறச் செய்யும் வகையில் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துதல் – தொடர்பாக.

பார்வை: வேலூர் மாவட்ட தினமலர் அலுவலக மேலாளரின் கடிதம் நாள். 10.04.2023.

#######

பார்வையில் காணும் கடிதத்தின்படி வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 10, 11, மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு அடுத்து என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம் எனவும், வேலை வாய்ப்பு தரும் படிப்பு எது, போன்ற தகவல்களை வழங்கும் விதமாக, தினமலர் நாளிதழ் மற்றும் VIT பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தும் வழிகாட்டி மற்றும் கல்விக்கண்காட்சி வரும் 22.04.2023 மற்றும் 23.04.2023 (சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் வேலூரில் உள்ள ஆயுதப்படை கவாத்து பயிற்சி மைதானத்தில் (நேதாஜி ஸ்டேடியம்) நடைபெற உள்ளது.

மேற்கண்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பொருட்டு மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கையினைக் கருத்தில் கொண்டு போதிய ஆசிரியர்களை நியமனம் செய்து மாணவர்களை பாதுகாப்பாக அழைத்துச் சென்று பயன்பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை உயர் / மேல் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>நிபந்தனைகள்</u>

1. மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே வழிகாட்டி மற்றும் கல்விக்கண்காட்சி நிகழ்ச்சயில் கலந்து கொள்ள செய்ய வேண்டும்.
2. வழிகாட்டி மற்றும் கல்விக்கண்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்கள் நியமித்து உடன் அனுப்பிவைக்க வேண்டும்.
3. மாணவர்களிடம் எவ்வித கட்டணத் தொகையும் வசூல் செய்யக் கூடாது. அனுமதி இலவசம்.
4. மாணவர்களின் பெற்றோர்களிடம் சம்மதக் கடிதம் பெற வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலருக்காக,
வேலூர்.

பெறுநர்
1. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து வகை உயர்/மேல்நிலைப் பள்ளிகள், வே.மா.
2. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை)/(தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்.

நகல் மேலாளர், தினமலர் அலுவலகம்,
153 பெங்களூர் சாலை, கொணவட்டம், வேலூர்–13. (தகவலுக்காக)

Scanned with Oken Scanner